**புளத்சிங்ஹள பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

புளத்சிங்ஹள பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதிக்கூற்றுக்கள் புளத்சிங்ஹள பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு

அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 2,103,503 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,420,731 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமான மான மூலம் | 2023 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2023 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2022 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | 2022 சிட்டையிடப் பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்ப ட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரியும் வரியும் | 4,502,502 | 3,399,060 | 3,905,678 | 1,658,843 | 4,247,502 | 3,332,380 | 4,311,869 | 1,984,073 |
| **(ii)** | வாடகை | 5,431,000 | 2,702,889 | 5,021,657 | 129,404 | 5,281,000 | 2,975,519 | 5,161,784 | 236,173 |
| **(iii)** | அனுமதி ப்பத்திரக் கட்டணம் | 1,005,500 | 572,843 | 888,338 | 37,500 | 880,500 | 410,166 | 600,775 | 72,041 |
| **(iv)** | ஏனைய வருமான ம் | 11,056,500 | - | 9,560,738 | - | 88,011,416 | - | 96,958,113 | - |
| | மொத்தம் | 21,995,502 | 6,674,792 | 19,376,411 | 1,825,747 | 98,420,418 | 6,718,065 | 107,032,541 | 2,292,287 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) ஆதனவரியும் வரியும்** | | |
| (i) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஆதனவரி நிலுவை ரூபா 1,790,198 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 860,274 அதாவது 48 சதவீதம் அறிவிடப் பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) மீளாய்வாண்டின் ஆதனவரி சிட்டையிடல் ரூபா 2,090,106 ஆக இருந்ததுடன் ஆண்டின் இறுதியில் ரூபா 582,209 அதாவது 28 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | மீண்டெழும் வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ஏக்கர் வரி நிலுவை ரூபா 61,912 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது அதில் ரூபா 48,509 அதாவது 78 சதவீதம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | தற்போது அறவிடப்படாதுள்ள மீதி ரூபா 39,192 ஆக இருந்ததுடன் அதனை விரைவாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**(ஆ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்து ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் 2023 திசம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 7,000,000 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,441,015 ஆகும். | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 93 ஆம் பிரிவின் பிரகாரம் சகல மலசல கூடங்கள் மற்றும் மலசல கூடக் குழிகள் உரிய கால எல்லையின் போது முறையாக சுத்திகரித்தல் மற்றும் பெறுமையாக்குவதற்காக தேவையான சகல நடவடிக்கை களும் பிரதேச சபையின் பணியாக இருத்தல் வேண்டும். எனினும் அதிகாரப் பிரதேசத்தில் மலம் அகற்றுவதற்காக 2½ வருட காலம் முதல் கலிபௌசர் சேவை நடாத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய பொது மக்களின் கோரிக்கை அகலவத்த அல்லது ஹொரணப் பிரதேசத்திற்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரப் பிரதேசத்தில் மலம் அகற்றல் உரிய பிரகாரம் அகற்றுவதற்காக தேவையான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். |

### 3.2 இனங்காணப்பட்ட நட்டம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| குருகே ஆதன வியாபார கம்பனியால் 1992 மே 15 ஆந் திகதி கூறுகளாக்கப்பட்ட இலக்கம் 278 என்ற வரைபடத்தின் மூலம் பொது | விசாரணையின் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தொடர்புடைய நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| செயற்பாடுகளுக்காக காணிப் பகுதி பிரதேச சபைக்கு ஒதுக்கப்படாதிருக்கும் போது பிரதேச சபையின் உப தலைவரால் எந்தவொரு அங்கீகரிக்கப்பட்ட அதிகாரமும் இன்றி அந்த நில வரைபடத்தை அங்கீகரிக்கப்பட்டிருந்தது. புளத்சிங்ஹள பிரதேச சபைக்கு பொது விளையாட்டு மைதானத்தை அமைப்பதற்கு இந்த காணியின் ஒரு பகுதியை பெற்றுக்கொள்வதற்கு 1996 ஆம் ஆண்டு முதல் சபை திட்டமிட்டிருந்த போதிலும் உரிய காணிப் பகுதி 2001 ஆம் ஆண்டு வரையிலும் சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமையின் அடிப்படையில் குருகே ஆதன வியாபார கம்பனியால் சபைக்கு எதிராக வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் அந்த வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் 2022 திசம்பர் மாதம் வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 7,839,997 சபையினால் குருகே ஆதன வியாபார கம்பனிக்கு இழப்பீடாக செலுத்தப்பட்டிருந்தது. எனினும் உப தலைவரால் மேற்கொள்ளப்பட்ட சட்டரீதியற்ற செயற்பாடுகள் தொடர்பாக அவருக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் சபையால் எடுக்கப்படாதிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 108 மற்றும் 156 இன் பிரகாரம் சபைக்கு ஏற்பட்ட நிதி ரீதியான நட்டத்திற்காக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டு அந்தப் பணத்தை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாசகர்களினால் எடுத்துச் செல்லப்பட்ட நூலகப் புத்தகங்கள் 14 நாட்களில் மீளக் கையளிக்க வேண்டியிருந்த போதிலும் சபைக்குச் சொந்தமான 05 நூலகங்களின் கீழ் 20 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து கையளிக்கப்பட்ட ரூபா 140,290 பெறுமதியான 644 நூலகப் புத்தகங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் | பெறுமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கையளிக்கப்பட்ட நூலகப் புத்தகங்களை மீண்டும் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது உரிய தரப்பினரிடமிருந்து பெறுமதியை அறவிடுவதற்கோ |

| | | |
|---|---|---|
| கையளிக்கப்படாதிருக்கும் போது அந்தப் புத்தகங்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது உரிய தரப்பினரிடமிருந்து பெறுமதியை அறவிடுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதி வரையில் 03 வாகனங்களின் உரித்தை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரித்து நிறுவனத்தின் பெயருக்கு கையேற்கப்படல் வேண்டும். | வாகனங்களின் உரித்தை நிறுவனத்தின் பெயருக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 127 ஆம் பிரிவு மற்றும் 1946 இன் 57 ஆம் இலக்க பொது மயானங்கள் மற்றும் தனியார் மயான நிலங்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் 03 ஆம் பிரிவின் பிரகாரம் உரிய அதிகார தரப்பினரால் சபையினால் சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 33 மயான நிலங்கள் சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | 12 மயான நிலங்களுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையிலிருந்தும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிலிருந்தும் பரிந்துரை கிடைத்த பின்னர் கையேற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தொடர்புடைய சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிராமிய வீதி புனரமைப்பு செயற்திட்டத்தின் (1Project) முதலாவது கட்டத்தின் கீழ் சபை அதிகாரப் பிரதேசத்தில் 05 வீதிகளை முழுமையாகவும் 05 வீதிகளை அரைவாசியாகவும் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. இடைக்கால உள்ளக இணைப்பு சிறு கற்கள் இட்டு | 05 காணிகளில் சிறு கல் இட்டு அபிவிருத்தி செய்யப்பட்ட பின் எஞ்சிய கல் இருப்புக்கள் சபைக்கு எடுத்துவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சபைக்கு கையளிக்கப்படாத சிறு கற்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பகுதியொன்று அபிவிருத்தி செய்யும் போது அகற்றப்பட்ட சிறு கல் சபைக்கு மீண்டும் கையளிக்க வேண்டியிருந்த போதிலும் சில தொடர்புடைய சிறு கல் பகுதி சபைக்கு கையளிக்காமல் தனியார் காணிகளில் வைக்கப்பட்டிருந்தது.

## 3.6 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2001 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் 04 உத்தியோகத் தர்களிடமிருந்து சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 262,840 கடன் மீதியொன்று மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பிணையாளர்களுக்கு அறிவித்தல், கடன் அறவிடல், சமரச சபைகளுக்கு அனுப்புதல் மற்றும் அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் மீதி அறவிடப்படல் வேண்டும். |